**சுருக்கம்**

நெடுஞ்சாலைத் துறை – கோயம்புத்தூர் மாவட்டம் – கோயம்புத்தூர் தெற்கு வட்டம் – குறிச்சி கிராமம் – குறிச்சி – நாச்சிபாளையம் இரயில் நிலையங்களுக்கிடையே இரயில்வே கடவு எண் 151க்கு பதிலாக சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்காக நிலம் கையகப்படுத்துதல் –தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15(1)ன் கீழான அறிவிக்கைக்கு ஒப்புதல் அளித்து தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது – திருத்திய அறிவிப்பு – வெளியிடுதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை (ம) சிறுதுறைமுகங்கள்(எச்.எஸ்.2) துறை

அரசாணை (டி) எண். 250 நாள் 12–12–2013

கார்த்திகை 26 , திருவள்ளுவராண்டு 2044

**படிக்கவும்:–**

1. அரசாணை (டி) எண்.195, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறை, நாள் 30–11–2012.
2. மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் அவர்களின் கடித எண் 10370/2010/ஊ6, நாள் 23–04–2013.

**********

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட அரசாணையில், கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு வட்டம், குறிச்சி கிராமம், இரயில்வே கடவு எண் 151க்கு பதிலாக இரயில்வே கி.மீ. 450/10–12 போத்தனூர்–மதுக்கரை இரயில் நிலையங்களுக்கிடையே சாலை மேம்பாலம் அமைக்கும் பணிக்காக குறிச்சி கிராமத்தில் உள்ள 1671 ச.மீ. ரயத்துவாரி புன்செய் நிலங்களை நில எடுப்பு செய்ய தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002) பிரிவு 15 (1)ன் கீழான அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட ஆணை வெளியிடப்பட்டது. மேற்படி அரசாணை, தமிழ்நாடு அரசிதழ் எண் 4, நாள் 01–02–2012 பகுதி II, பிரிவு 2ல் பக்கங்கள் 50–52ல் வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே பார்வை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் 2001 (தமிழ்நாடு சட்டம் 34/2002) பிரிவு 15 (1) இன் கீழ் நிலஎடுப்பு செய்யப்படும் புலங்களில் உள்ள கட்டுமான விவரங்களை அந்தந்த புல எண்களுக்கான பிரசுரங்களில் குறிப்பிடும் வகையில் மேற்படி அரசாணைக்கு திருத்திய அறிவிக்கையினை வெளியிடுமாறு அரசை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலரின் கருத்துரு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டு அதன்படி மேலே படிக்கப்பட்ட அரசாணை மற்றும் அதனுடன் தொடர்புடைய 01–02–2012 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண். 4, பகுதி II, பிரிவு 2, பக்கம் 51–52ல் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கான திருத்த அறிவிக்கைக்கு அரசால் ஏற்பளிக்கப்பட்டு, அதனை தமிழ்நாடு அரசிதழில் வெளியிட ஆணையிடப்படுகிறது.

4. இவ்வரசாணையின் இணைப்பில் கண்டுள்ள திருத்திய அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் அடுத்த வெளியீட்டில் வெளியிடுமாறும், அவ்வாறு வெளியிடப்படும் அரசிதழின் 10 நகல்களை அரசு முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சியர் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட வருவாய் அலுவலர் ஆகியோருக்கு அனுப்புமாறும் அரசு மைய அச்சகத்தின், பணி மேலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–79. (இ)
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–5.
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை–15.
மாவட்ட ஆட்சியர் , கோயம்புத்தூர்.
மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர்.
நகல்
வருவாய்த் துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9.
இ.கோ/உ.ந

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## அறிவிக்கை

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்.2) துறையின் 30–11–2011 நாளிட்ட அரசாணை (டி) எண். 195 உடன் தொடர்புடைய 01–02–2012 நாளிட்ட தமிழ்நாடு அரசிதழ் எண். 4, பகுதி II, பிரிவு 2, பக்கம் 51–52ல் குறிப்பிடப்பட்டுள்ள வரிசை எண்களுடன் வெளியிடப்பட்ட அறிவிக்கைக்கு கட்டுமானங்களுடன் கூடிய திருத்த அறிக்கை பின்வருமாறு வெளியிடப்படுகிறது.

## திருத்த அறிவிப்பு

தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001, பிரிவு 15 உட்பிரிவு (1)ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 34/2002) மேற்காணும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கையை பின்வரும் திருத்தங்களோடு வாசிக்கவும்.

## அட்டவணை

| மாவட்டம்: | கோயம்புத்தூர் | வட்டம்: | கோயம்புத்தூர் தெற்கு | கிராமம்: | குறிச்சி |
|---|---|---|---|---|---|

வரிசை எண்.

3. புல எண் 181/4A1 பகுதி– ல் சிமெண்ட் கலவை சுவர் கொண்ட மங்களுர் ஓட்டு கட்டிடம் உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

4. புல எண் 181/4A2 பகுதி– ல் சிமெண்ட் கலவை சுவர் கொண்ட ஏ.சி.சீட் கட்டிடம், சிமெண்ட் கலவை சுவர் கொண்ட இரண்டு மங்களுர் ஓட்டு கட்டிடங்கள் உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

5. புல எண் 181/5A1 பகுதி– ல் கம்பிவேலி உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

6. புல எண் 181/5A2 பகுதி– ல் சிமெண்ட் கலவை சுவர் கொண்ட மங்களுர் ஓட்டு கட்டிடம், சுற்றுச்சுவர், இரும்பு கதவு உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

7. புல எண் 181/5A3 பகுதி– ல் சிமெண்ட் கலவை சுவர் கொண்ட மங்களுர் ஓட்டு கட்டிடம் மற்றும் ஏ.சி.சீட் கூரை வேய்ந்த கட்டிடம் உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

9. புல எண் 688/1A1A1 பகுதி– ல் ஆர்.சி.சி. பால்கனி, ரோலிங் ஷ்ட்டருடன் கூடிய ஏ.சி.சீட் கட்டிடம் உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

11. புல எண் 688/1A3 பகுதி– ல் சிமெண்ட் கலவை கொண்ட ஏ.சி. கூரைவேயப்பட்ட கட்டிடம், ரோலிங் ஷட்டர் உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

17. புல எண் 688/1C1 பகுதி– ல் சுற்றுச்சுவர், இரும்புக்கதவு உள்ளதாக சேர்த்து படிக்கவும்.

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.